**நவம்பர் -11**

**"நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தைக் (மனவலிமையைக்) கூட்டி வழங்குங்கள்." -2பேது 1 : 5.**

கர்த்தருடைய ஜனங்களிடத்திலுள்ள ஒரு பெரிய கஷ்டம் என்னவென்றால், ஒரு சரியான போக்கிற்காக உறுதி கொண்டிருந்து இவ்விதமாக சோதனையை எதிர்த்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் போதுமானபடி பிடிவாதமான செயலை மேற்கொள்கிறதில்லை. அநேகர் சோதனைக்காரனிடம், "இந்தச் சமயத்தில் இணங்கக்கூடாது என்று நான் முடிவு செய்திருக்கிறேன்." என்று சொல்கிறார்கள். இவ்விதமாகத் தங்களுடைய சொந்த மனதிலே ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் விட்டு வைக்கிறார்கள். அதன் மூலமாக சோதனைக்காரன் திரும்ப வரலாம். நம்முடைய கர்த்தருடைய போக்கே சரியானதொன்றாக இருந்தது. நாம் சோதனைக்காரனை அப்பொழுது சதாகாலமுமாக அகற்றிவிட வேண்டும். நாம் நமது நிலையை அவ்வளவு உறுதியாக்கிக் கொள்கிறதினால், எதிராளியும் கூடத் திரும்பவும் அந்த வழியில் நம்மிடத்தில் வருவது லாபகரமானதல்ல என்று எண்ணுவான். "எதிராளியே என்னை விட்டு விடு, நான் தேவனையே தொழுதுகொண்டு அவரையே சேவிப்பேன்."

**- Z ’04, 10 (R 3296)**

கிறிஸ்தவ குணத்தின் அஸ்திபாரமாக, தேவன், கிறிஸ்து, இவர்களைக் குறித்து மனதிற்குரிய உண்மையான மதிப்பையும், இவர்கள் மேலுள்ள இருதயப்பற்றையும் விருத்தி செய்தபிறகு, இந்த ஆதாரத்தின் மேல், தைரியத்திலிருந்து ஆரம்பித்து மற்ற உயர் சிரேஷ்ட குணசீலங்களை (தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு) நம்மில் கடடுவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். வெற்றிக்காகவுள்ள நம்பிக்கையே தைரியத்தின் சாரமாய் இருக்கிறது. நமக்கு இப்படிப்பட்ட நம்பிக்கையின் பொருள்களையும், அதற்காக அவருடைய ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையிலும், கிறிஸ்துவின் ஆசாரிய உத்தியோகத்திலும், ஆவியின் பங்குகொள்ளுதலிலும், ஒரு நிச்சயமான ஆதாரத்தையும் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட நம்பிக்கை எந்தக் கஷ்டத்தையும் சந்திக்கவும், எந்த எதிராளியோடும் தொடர்ந்து போர்புரியவும் நம்மைத் தைரியமுள்ளவர்களாக்கும். இப்படிப்பட்ட தைரியத்தை விருத்தி செய்வதற்கு இடையறாத சுறுசுறுப்பும், ஜாக்கிரதையும் வேண்டியிருக்கும். இல்லையேல் நம்முடைய முயற்சிகள் உண்மையினால்த் தாங்கப்படாமல், முடிவாக ஜெயங்கொள்ளுவதற்கு போதாதென்று நிரூபிக்கும். **- P ’26 157.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எபி 11:1,2,39; சங் 27:13; ரோம 8:24,25; 2கொரி 4:18; 5:7; யோசு 1:1-9; 2நாளா19:11; நீதி 28:1;**

**1கொரி 16:13; பிலி 1:27,28; 2தீமோ 1:7.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 179 (R 5705).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் விசுவாசத்துடன் தைரியத்தையும், சேர்த்துக்கொண்டேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன் என்ன?**